2024 ஜூன் 29]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2024), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 28-6-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2024 ஜூன் 29

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் புதிதாக 4 மாநகராட்சிகளை உருவாக்குவதாக இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லியிருக்கிறார்கள். அது தேவைதான். உதாரணத்திற்கு, ஓசூர்; மாவட்டத் தலைநகர் இல்லாத ஒரு நகராட்சியை மாநகராட்சியாக அறிவிக்க வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கை வைத்தேன். அதேபோல, வேலூர், ஈரோடு, திருப்பூர், தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கெல்லாம் நான் கோரிக்கை வைத்தேன். அது நிறைவேற்றப்பட்டது. இப்போது 4 புதிய மாநகராட்சிளை அறிவிக்கிறீர்கள். மாநகராட்சியாகத் தரம் உயர்த்துகிறீர்கள். வரவேற்கத்தக்கது. அதேபோல், இன்றைக்குத் தென் மாவட்டங்களுக்கு எல்லாம் செல்வதற்கு வழித்தடமாக இருப்பது விழுப்புரம். அதுவும் ஒரு பெரிய நகரம். சுற்றியுள்ள பகுதிகளையெல்லாம் இணைக்கலாம். புதிய விழுப்புரம் மாநகராட்சியாக உருவாக்குவது, சென்னையை ஒட்டி இருக்கிற மிகப் பெரிய மாவட்டமாக இருக்கக்கூடிய திருவள்ளூர், வேலூர் இரண்டையும் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதையும் இதோடு சேர்ப்பதற்கு முன்வர. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், வேலூர் ஏற்கெனவே மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. தாம்பரம் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. நீங்கள் முழுவதும் படித்துப் பார்க்க வேண்டும். ஆவடியும் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் காலையிலிருந்து confuse ஆகியிருக்கிறார்கள். நாம் என்ன செய்கிறோம், எங்கு இருக்கிறோம் என்று, (குறுக்கீடு) உங்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

2024 ஜூன் 29]

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளையெல்லாம் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவதற்கும், அதேபோல் பெரிய ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவதற்கும் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்து அதைச் செய்ய வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் பிரிவு, 3-ன்படி ஓர் உள்ளாட்சிப் பகுதியில் குறைந்தபட்சம் பத்தாயிரம் மக்கள் தொகையும், 30 இலட்சம் ரூபாய் வருமானமும் கொண்டுள்ளவற்றை பேரூராட்சியாகவும்; முப்பதாயிரம் மக்கள் தொகையும், 50 இலட்சம் ரூபாய் வருமானமும் கொண்டுள்ளவற்றை நகராட்சியாகவும்; 3 இலட்சம் மக்கள் தொகையும், 30 கோடி ரூபாய் வருமானமும் கொண்டுள்ளவற்றை மாநகராட்சியாகவும் தரம் உயர்த்துவதற்குத்தான் சட்டம் இயற்றப்பட்டது. இப்போது இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்குக் காரணம் என்னவென்றால், மாவட்டத் தலைநகர், பெரிய சுற்றுலா நகரங்கள், கோயில்கள் இருக்கிற இடங்கள், அதிகமான மக்கள் கூடுகிற இடங்கள், அதேபோல historical places போன்ற இடங்களையெல்லாம் தரம் உயர்த்த வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத்தைத் தளர்த்தி, அரசு நினைத்தால் குறைவான மக்கள் தொகை இருந்தாலும், வருமானம் குறைவாக இருந்தாலும் அவர்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத்தைத் திருத்தி, தரம் உயர்த்துவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நீங்கள் கூறியதுபோல், ஊராட்சியாக இருப்பதை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தத் தேவையில்லை என்று பல இடங்களில் சொல்கிறார்கள். அதற்கென்று ஒரு Committee அமைக்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பொதுமக்களிடம் விசாரிக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் அந்தக் கிராம மக்கள், 'தரம் உயர்த்தத் தேவையில்லை' என்று கூறினால், மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்கள் மூலமாக அரசுக்குத் தெரிவிக்கப்படும். இதில் ஒரு சங்கடமான விஷயம் என்னவென்றால், ஒரு பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் இன்னொரு பகுதி தங்களுடன் வந்து இணைந்துவிட்டால் தான் மீண்டும் தலைவராக வர முடியாது என்கிற நோக்கத்திலே, இணைக்க வேண்டாம், அது அப்படியே இருக்கட்டும் என்று சொல்கிறார்கள். மக்கள் தொகையைக் கணக்கெடுத்தால் 7,000 பேர், 8,000 பேர் இருக்கிறார்கள். ஒன்று ஊராட்சிகளாகப் பிரிக்க வேண்டும் அல்லது தரம் உயர்த்த வேண்டும் என்பதுதான் நோக்கம். Committee அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய கருத்தைக் கேட்டுத்தான் தரம் உயர்த்தப்படும். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரூராட்சிக்கு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. கே.என். நேரு: பேரூராட்சிக்கு மக்கள் தொகை 30,000 இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிராமப் பஞ்சாயத்தில் எவ்வளவு இருந்தால் அதை டவுன் பஞ்சாயத்து ஆக்கலாம்?

மாண்புமிகு திரு. கே.என். நேரு: இல்லை. பேரூராட்சிக்கு மக்கள் தொகை 10,000 இருக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் கூறியதுபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்தான் காலையிலிருந்து கொஞ்சம் குழம்பியிருக்கிறார்கள். உங்களுடைய சொந்தக்காரர்தான்; பார்த்துக் கொஞ்சம் சொல்லுங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் அருகில் இருப்பதால் கொஞ்சம் குழப்பமோ? (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கே.என். நேரு: இருங்கள். நான் இன்னும் பதிலைக் கூறிமுடிக்கவில்லை. அதற்குள் மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்களை அழைக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இந்தப் பகுதிகளெல்லாம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. அரசு நினைக்கின்றபோது, குறிப்பாக 11 இடங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் கிராம ஊராட்சியில் இருக்கின்றன. அவற்றைத் தரம் உயர்த்த வேண்டும். அதேபோல, அதிக சுற்றுலாப் பயணிகள் வருகிற இடங்கள் ஊராட்சிகளாக இருக்கின்றன. அவற்றைத் தரம் உயர்த்துவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, எங்கள் துறையினுடைய செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் தலைமையில்* Committee *ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கமிட்டி, மக்களுடைய கருத்தைக் கேட்டுத்தான் இந்தப் பணிகளையெல்லாம் செய்யவிருக்கிறது. (குறுக்கீடு) உங்கள் கருத்துகளையும் கேட்டுக்கொள்கிறோம். நான் சொன்னேன் அல்லவா! நீங்கள், அடுத்த ஊர் வந்துவிட்டால், நீங்கள் ஊராட்சித் தலைவராக வர முடியாது என்பதற்காகச் சேர்க்க வேண்டாம் என்று சொன்னால், அது எப்படிச் சரியாக வரும்?*

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா அவர்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய ஊராட்சிகள் சிறப்பாகச் செயல்பட்டதற்காக* President award, Prime Minister award *போன்றவற்றைப் பெற்றிருக்கின்றன. அந்த ஊராட்சிகளை மாநகராட்சியோடு இணைக்கும்போது அந்த ஊராட்சிக்கென உள்ள தனித்துவமே போய்விடும். ஆகவே, அப்படிப்பட்ட ஊராட்சிகள், ஊராட்சிகளாகவே இருக்க வேண்டும். அதை மாநகராட்சியாக மாற்றக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நகராட்சியில், வேளச்சேரியில் இருக்கிறார். அங்கு அனைத்தும் நகரப் பகுதியாக*

இருக்கிறது. அவர், எந்த ஊராட்சியைப் பற்றி சொல்கிறார் என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் town-ல் வசித்து வருகிறார். எனவே, எந்த இடமாக இருந்தாலும்,—56-க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கள் பகுதியை நகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மேலும், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், பேரூராட்சிகள், நகராட்சிகளைத் தரமுயர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்தைக் கேட்கிறோம்; மக்களுடைய கருத்தைக் கேட்கிறோம்; பொதுவாக, அனைவருடைய கருத்துகளைக் கேட்டுத்தான் அந்தப் பணிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2-ல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2024 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2024), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*